369

உ

கணபதி துணை.

ஸ்ரீ பால சுப்ரமண்யாய நம:

ஆண்டார் குப்பப்
பதிற்றுப்பத்து பக்திமாலை.

இது

பொதிகைமலைச் சித்தர் மரபு
ஞானநந்த நாராயண தேசிகர்
மாணவருளொருவரும்.
கிளாம்பாக்கம்—அப்பாஜிபிள்ளை
குமாரருமாகிய
கி. முனிசாமிப்பிள்ளையவர்களால்
இயற்றியது.

சென்னை
புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1924.

ரிஜிஸ்டர் காபிரைட்.

2468
15 JUN 19..
926:58.412AK
N24.

உ

கணபதி துணை.

ஸ்ரீ பால சுப்ரமண்யாய நம:

ஆண்டார் குப்பம்

பதிற்றுப்பத்து பக்திமாலை.

15 JUL 1924

இது

பொதிகைமலைச் சித்தர் மரபு

ஞானாநந்த நாராயண தேசிகர்

மாணவருளொருவரும்,

கிளாம்பாக்கம்—அப்பாஜிபிள்ளை

குமாரருமாகிய

கி. முனிசாமிப்பிள்ளையவர்களால்

இயற்றியது.

சென்னை

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

ரிஜிஸ்ட்டர் காபிரைட்.

179854



ஸ்ரீபாலசுப்பிரமண்ணியர்.

உ

சிவ மயம்.

சாற்றுக் கவிகள்.

சென்னை ஆனந்தாஸ்சிரம சாதுமகாசங்க சங்கமூர்த்தியும்
ஸ்ரீ ஜெகத்குருபீடம் நியாய சந்திரவேதாந்த பாஸ்கர
ஸ்ரீமத் மகாமண்டலேசுரவீர
சுப்பைய ஞானதேசிகேந்திரசுவாமிகள் இயற்றியது.

தனிச்சாமி யெனச்சனகன் முடிதனிலும்
அடிமலரைத் தந்த தீரன்
நனிச்சாமி கரங்களமாய்த் தனைத்தானே
நாடுவர்க்கு நண்ணா நிற்போன்
முனிச்சாமி யத்தகைய முருகபிராற்
கன்பினுடன் மொழிபா மாலை
கனிச்சாறுங் கண்டுமென வதிமதுர
முதுவிரதங் காலுங் காண்மின்.

பொதிகைமலை சித்தர் மரபு.
ஞானானந்த ல. நாராயண தேசிகரவர்கள்
பிரதம மாணாக்கராகிய
மேலக்குண்டயார் அகத்திய ஆஸ்ரமம்
ஸ்ரீமத். ஞானானந்த ஜபராமஸ்வாமிகள் இபற்றியது.

சீர்ஆண்டார் குப்பமதில் பாலசுப்பி ரமண்யர்மேல்
சிறந்த பாக்கள்
எர்பெற்ற நாரணரின் மாணாக்கன் முனிசாமி
யெழிற் கவிஞன்
பாரிலுளோர் புகழ்போத்த செய்தனனான் பாவலரும்
புகழ்ந்து கேழ்க்க
நார்பெற்ற முருகரிட வன்பன்யான் நாளுமேற்ற
நவின்றான் மாதோ.

சென்னை தியலாஜிகல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய
ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியார்
அவர்களியற்றியது.

சீர்பூத்த வாண்டார்குப் பத்தமர்ந்து சேர்ந்தார்க்குச்
செல்வ நல்கும்
பேர்பூத்த பாலசுப் பிரமணியக் கடவுளடிப்
பேணி யேத்தும்
ஏர்பூத்த முனிசாமி யெனும்புலவன் பன்னயமு
மினிது தோன்ற
பார்பூத்த பதிற்றுப்பத் துப்பக்திப் பாமாலை
பகர்ந்தான் மாதோ.

பொதிகை மலைசித்தர் மரபு.

ஞானநந்த நாராயண தேசிகரவர்கள்
மாணவருளொருவராகிய
ஞானநந்த மணவாளசுவாமிகள் இயற்றியது.

அகத்தியனார் மரபுதனில் வந்தமேலா
மாதிநாரா யணர்தஞ் சீடன்
அகந்தனியிற் சாதனங்க ளமரப்பெற்
றடியாரைத் துதிக்குந் தூயோன்
இகந்தனிலாண் டார்குப்பத் திலகிசர்
பாலசுப்பிர மண்யர் மீது
பகந்தருமிப் பாமாலை பக்தியுடன்
முனிசாமி பகர்ந்தான் மாதோ.

சென்னை சரஸ்வதி சங்கத்து அங்கத்தவரிலொருவராகிய
ஸ்ரீமான் வே. பார்த்தசாரதி பிள்ளை அவர்களியற்றியது.

அறக்கடல் துயிலும் அச்சுதன் மருகன்
மறப்பவம் துடைக்கும் வள்ளி மணாளன்
ஆண்டார் குப்பத் தடியர் மிடிதீர்
ஆண்டகை முருக னடியிற் பாமலர்
சூடினன்: அப்பா ஜிநடுத் தோன்றல்
கோடியர் கூடுங் கிளாம்பாக் கத்தவன்
கடலைப் பருகுங் கடமுனி வழிவரும்
திடநா ராயணத் தேசிகச் சீடன்
முனிசா மியெனுங் கருணிகன் மொய்வினை
தனுவி லிழைத்தனன் தவம்சிறி தாதலின்
அண்டும் பிணியினி தகலும்
மண்டும் பவநோய் மாய்ந்தொழி யும்மே.

பொதிகைமலை சித்தர் மரபு

மேலக்குண்டயார் அகத்திய ஆஸ்ரமம்

ஞானநந்த ஜயராமசுவாமிகள் மாணவரிலொருவராகிய
ஸ்ரீமான். வேதகிரிமுதலியார் அவர்களியற்றியது.

பார்மேவு மாண்டார்க்குப் பத்தமர்ந்த பாலசுப்ர
மண்யர்மீது
கார்மேவு பதிற்றுபத்து பாமாலை நலமுடனே
நவின்ற கவிஞன்
சீர்மேவு கிளாம்பாக்கக் கருணீகர் செழித்தோங்க
குலமதிற் சனித்து
பேர்மேவு நாரணர்தா ளென்னாளும் பேணுகின்ற
முனிசாமி மாதோ.

ஓம்

திருச்சிற்றம்பலம், சிவோஹம்.

செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூர் தாலுக்காவைச் சேர்ந்த குசஸ்தல நதியின் சமீபத்தில் 104 நெம்பர் பாகல் மேடு கிராமத்தில் அடியார்கள் அன்புக்குஆவலுற்றவரும், ஸ்ரீமான் ஈச்சூர்—சச்சிதானந்த சுவாமிகள் பரம்பரை மாணவர்களில் ஒருவருமாகிய ஸ்ரீமான் துரைசாமிபிள்ளை யவர்களின் பொருளுதவியால் இந்த பதிற்றுப்பத்துப் பாமாலையை அச்சிட்டு 1924ஞு மேமீ 4உ க்கு சரியான ரத்தாக்ஷிஞு சித்திரைமீ 22உ ஆதிவாரம் கார்த்திகை தினத்தில் ஆண்டார் குப்ப ஸ்ரீ பாலசுப்ரமண்ணியஸ்வாமி சன்னதியில் பக்தர்களுக்கு பரோபகாரமாக கிரயமின்றி வினியோகிக்கப்படுவன. ஆகையால் இதைக் கண்ணுறும் பக்தசிரோமணிகள் இந்த பாமாலையை பக்தியோடுஅனுஷ்டித்து ஷை பாலசுப்ரமண்ய சுவாமி திருவடிகளுக்கு யாத்திராவீர்களெனவும் ஷை அடிமையை மங்களாசாஸனம் செய்வீர்களென ஷை எம்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றனம்.

அவையடக்கம்.

எல்லாம் வல்ல இறைவ ணுண்டார்
புரிவாழ் குமாரனிணை யடியே
நல்லார் முன்னே யானோர் புலவன்
போலத் துதிக்க நாடுதலே
நல்லார் மொழிமலர் நாறென் சொல்லாய்
மையின் முனடிக்கும்வான் கோழியென
பல்லோ ரவைமுன் பாடத்துணிந்தேன்
பிழையை பொருப்பீர் பணிந்தேனே.

ஸ்ரீ குகேசாய நம:

விநாயகர் காப்பு.

சித்தி ஞான சிவசுப்ர மண்யனை
அத்தி பாக ணண்டார்புரி யண்ணலின்
பக்தி மாலைப் பதிற்றுப்பத் தோதவே
மத்த யானை மலர்க்கழல் வாழ்த்துவாம்.

வழிபடு கடவுள் வணக்கம்.

பால சுப்பிர மண்யப் பரமனைக்
காலை மாலை கருதித் துதித்துமிஞ்
ஞால மீதலை நாயேன் றுயர்கெடச்
சால நம்பினேன் சண்முக மூர்த்தியே.

நூல்

1 பொங்குஞ் சோதிப் புரமக மெண்டிசை
எங்குமாக விலகியு மன்பருட்
சங்கை தீர்க்கத் தனியுருக் கொண்டவ
னெங்க ணயக ணண்டார் புரீசனே.

2 மாண்ட வென்பணி மன்னுயிர்க் கைந்தொழிற்
றூண்ட வம்புரி சங்கரன் றேசிகா
வேண்டி னேனடி யேன்றுயர் வேற
ஆண்டார் குப்பத் தமர்ந்தரு ளையனே.

3 இடர தாங்கட லேறிச்செல் லோடமாம்
அடரக விருட் கன்பெனு மருணனும்
உடற்கு றும்வினை வேரறு வாளதாம்
சுடர்மிகுஞ் சுப்ர மண்ணியன் பாதமே.

4 தொந்தி மாமுகத் தோன்ற றனக்கிளை
கந்த வேளைக் கருத்தி லிருத்தியே
ஐந்து பூத மடங்குவ தன்முனஞ்
சிந்தித் தோட்டுவன் றீவினை யாவுமே.

5 மாயன் றந்த மகள்மண வாளனை
வாயிற் பாடி வணங்குநல் லோர்களின்
பேயுந் தீயப் பிணியு மகன்றிட
கோயி னெஞ்சங் குடிகொள் குமரனே

6 செல்வ மீயுஞ் சிறப்பொடு மக்களுங்
கல்வி நல்குங் கடம்பன் கடவுளே
அல்ல றீர்த்த வாண்டார்புர மேவினு
றொல்லை மாவினை தூரத்த கலுமே

7 கன்னி யாங்குற வள்ளிக் கணவனே
யென்னை யாள்பவ னெங்கு நிறைந்தவன்
றன்னை யான்றொழத் தாளிணை தந்தவ
னன்னை மிக்கவ னாண்டார் புரீசனே.

8 வெருளுந் தேவரும் வேதனும் போற்றுவோ
னிருளருத் தோங்கு வென்மனச் சோதியே
யருளும் வள்ள லறுமுக னன்றியோர்
பொருளுங் கண்டிலன் பூதலந் தன்னிலே

9 சென்னி நிற்பது செவ்வேலன் சீரடி
யென்னு ணிற்பன வெந்தை சடாக்கரம்
தன்னைக் காண்ப திருவிழி தன்னிலும்
இன்ன மிர்த மிறையவன் வாழ்த்தலே.

10 வானு மண்ணும் வளிபுனற் றீயொடு
மான முக்குண மாயையெ லாமுமா
மூனி றைந்த வுடலுக் குயிருமாஞ்
ஞான தேசிக னாண்டார்புர னண்பனே.

வேறு.

படபட வெனசிற கடிபட வோடும்
பச்சை மயின்மீதே
கடவா ரணமெட் டிடலு நடுங்கிட
கடிகிவலம் வருவோய்
ஜடமுரு வினைகெட மடுவிற் றோய்ப்பவர்
சங்கடந்தீர்த் தருள்வோ
யடவொடு நடமிடு மரனருட் பாலா
வாண்டார் புரிக்குமரா 1

மின்னொளி நிலையில மன்னுயிராக்கை
விசாரித் திடுவேனை
உன்னொளி பதம்பெறு மன்பர்க ளோதித்
தளிரின் றுளியென்பார்
மன்னொளி ஞானக் கதிர்வடி வேலா
மனத்துயர் தீர்த்தருள்வா
யன்னிய னென்றெனை யகலப் போகா
தாண்டார் புரிக்குமரா 2

காதக மணிமுடி நிலம்பட வேறொடு
கந்தா குமரேசா
சீதள பங்கய பாதமென் றகமிசை
சேரப் பெருவேனோ

பாதகந் தனைவிடு பத்தர்க ளடிதொழப்
பூற்றை யெனக்கருளாய்
ஆதர வாமென தாருயிர் நாயக
வாண்டார் புரிக்குமரா 3

நிலையில மக்களும் பெண்டிரு மிரணிய
நிச்சய முணராம
லுலைதரு மெழுகென வலையும் புலையே
னுய்யும் படியருளாய்
மலைபல திரியும் மரகத மயிலோய்
மலைதரு மகட்பாலா
அலைவறு நிலையே யைங்கரர் கிளையோ
யாண்டார் புரிக்குமரா 4

அணிதிகழ் திருவுர வறஞ்செய தவமுர
வருளென் றனையோத
தணிவுகொள் மனமுர தையிரிய நிலைவர
தகையுரு ஞானமுர
சணிதமி லடியவர் கைதொழு வருணிரை
கமலபொற் பதந்தருவாய்
அணிமணி யொலிபட யரவுமிழ் மரகத
னாண்டார் புரிக்குமரா 5

எனையடை வினையழி வஃகயரு ளெங்கும்
நிறைவாகிய பொருளே
தனையுணர் யோகிக ளிருதய மலருறை
யானை சகோதரனே
தினைனிலங் திரிதரு குறக்கொடி யருசமர்
சேவலங் கொடியோனே

அனைதந்தை தமர்மனை யாயொளிர் குருபா
ஞண்டார் புரிக்குமரா 6

அரிதெனு மறிவரு ளறுமுக தேவா
வடியேன் சிரமிசையே
பறிவொடு நினதிரு பதமலர் தருவது
பண்டைத் தவப்பயனே
செருதரு மருவரின் மயல்விட வெனையாள்
செம்மான் மருகோனே
அரியய னமரர்க ளனுதினந் துதிசெயு
மாண்டார் புரிகுமரா 7

மனதிற் கினியக் குறநற் கொடியை
மருவும் புயமுருகா
மனனத் திரையின் மிதமற் றுழலும்
மகவெனு மாசைவிட
ஜனனச் சுழல்விட் டுனதற் புததா
டனைதந் தெனையாளாய்
அனகன் னசலன் னரனு ளருளு
மாண்டார் புரிக்குமரா 8

ஓமெனும் பொருளுரை யுத்தம தேசிக
வுயர்ஞானப் பரனே
எமனெழுந் தெனதுயிர் கொள வருமுன
மெழிலுரு மயின்மீது
தாமதமின்றித் தமியன் முன்வரு வாய்
தனிவடிவே லவனே
வாமமும் பெருபரை முலையமு துணவரு
மாண்டார் புரிக்குமரா 9

Q26:38.2112 AU N24

தங்குமலைப் பலதணிகை மலைமுத லெங்கு
நிறைந் தவனே
சங்கர சிவசிவ சரவண பவவென
வடியவர் தினந்தொழவே
தங்க மயின்மிசைத் திருவுரு வாகித்
தரிசனந் தந்தருள
அங்கையி னெல்லிக் கனியென வருளு
மாண்டார் புரிக்குமரா 10

வே று.

நீடுமாசைநீர் நீலவெண்டன நெஞ்சுழன்று திகைத்திட் கூடுவிட்டென தாவிமரலியுங் கொண்டுபோக வருமுனம் ஆடுமாமயின் மீதிவர்ந்தெனை யாளவந்தரு ளண்ணலே ஆடிடும்பர னருளுஞ்சுப்பிர மண்ணியாவுனை யண்டினேன்

மலமிகுத்திடு மட்குடத்தையான் மனதிநித்தமென் றெண்ணிட, நிலமெனக்கெனு மெரியெனக்கெனு நின்றநாய்க டனக்கெனு கலகமிட்டிடு காமமாதியர் கட்டுமால்வலை பட்டிடா, தலரிசூழொளி யாண்டார்குப்பத் தறுமுகாவுனை யண்டினேன். 2

காகநாய்நரி கூளிகள்பல கழுகுவிருந்துணு மூனுடல் தாகங் கொண்டுபேய்த் தேரைநீரெனத் தாண்டியோடிடு மானென, மோகம் வைத்திதை மெய்யெனப்பகர் மூடனு மடி யேனையுஞ், சோகம்பாவனை தந்திடும்பால சுப்பிரமணிய வண்டினேன். 3

விடபமாமடு வீழ்ந்திடுஞ் சிரியேனையும் மேடேரவே கடனமாமயின் முதுகிலேறிய நளினபொற்பதந் தந்தருள்

இடருதவிடு வெஞ்சினந்தணி வீயவந்த வருணனே, அடருஞ்சோலைசூ ழாண்டார்குப்பத் தறுமுருகாவுனை யண்டினேன். 4

விட்பிடுங்கன முலைநுடங்கிடை மீதிலோங்கும் மயக்கெனுங், தும்புதனை முனங் காலனார்விடுசூதுமரிகிலன்சுகமெஞ, நமபுமடியனு நினதுகழநிழ நாடியறிவுரு வாகிட, சம்புசெவிதர வோதுபிரணவ சாமினுதனே வண்டினேன். 5

சதிசெயும்முட லமுதமென்றிதை சந்ததமவல் கொண்டுயான், மதியழிந்துனை நினைதலின்றியே மனனவெந்திரை யாழ்கின்றேன்தகிதிதிமியெனநடனமயின்மிசை யமர்ந்திடுஞ் சரவணபவ, அதிதமாய்மன வாக்குக்கெட்டிடா தாண்டார்புரிகுக வுண்டினேன். 6

எண்ணிலாத பிறவியுள்ளது மேதுவின்றிய வெண்ணமுள்ளதுங், கண்ணினுல்வருபாதகங்களுங்கருணையனல் படு மிலவென, தண்ணளிதந் தாளுகின்ற தயாபராதணிகாசலா, பண்ணினுல்புக ழடியர்போற்றிடு பாதமேபெற வண்டினேன். 7

அரவமம்புலிநதியணிந்தவனருள்பெறப் புகல்கின்றவா பரவுமடியவர் வாழவருள்புரி பாலசுப்பிர மண்யனே, நிறவிடும்பல திசையுமுனதரு ணோர்மைகண்டி யானுய்யவே கரதலங்கனி யெனவிளங்கிய கந்தனேயுனை யண்டினேன்.

நீதியாயுயிர் தோறுநின்றிடு நித்தியன்க்ருபை யுற்றவன் ஆதிகாரண னேதுவேதிய னளந்திடாதவ னருள்பெரா ஓதிவானென வேதவுட்பொரு ளோதையா யந்தித்தவா ஆதியாயொளி ராண்டார்புரிக்குக வாளுவாயுனை யண்டினேன். 9

அண்டகோளமு மகிலலோகமு மப்புரத்துள சிவரும் முண்டகக்கழன் முருகன்றண்ணருள் வேண்டிடா தவரில் லையே, தண்டுளாவணி மங்கைமார்பனுந் தந்திடுமகட் கன் பனே, அண்டினேனுனை யாண்டார்புரிகுக வாதரித்தெனை யாளுவாய். 10

வேறு.

1 நித்தநித்த மறியும்வண்ண நின்மலா மனத்துளே
சித்திதந்து வாழவுன்றன் சேவடிக்கா ளாக்குவாய்
அத்தியுங் குறத்தியுஞ்செய் யன்புகொள் ளாண்டார்புரா
சத்தியின் முலைப்பா லுண்ட சாமியுன்னை தொழுவனே

2 அத்தனின் றெழும்பொறிக ளாறுருவ மானதும்
சத்திசேர்த் தணைத்தெடுத்த சரவணத்தி லுற்பவா
சித்தமுந் தெளிந்தவன்ப ருள்ளொளிருஞ் சோதியே
பத்திசூழா ண்டார்புரிவாழ் பாலசுப்ர மண்யனே.

3 கானுலாவு மயிலிலேரு மாண்டார்புரியிற் கந்தனை
ஞானமின்றி யடியனுவல் கொண்டுபாட நாடுதல்
வானிலொளிரும் மதியைதாவ குழவிகையை நீட்டலுங்
கானனுங் கடல்கடக்க கையிநீந்த லொக்குமே

4 தருவுமாகி நின்றுவேடர் தையல்காண வந்தவா
அருவுமா யுருவுமா யருள்தரு மாண்டார்புரா
குருமுனி யகவிருள் குலைத்திடுங் குமரனே [வனே.
அருவர்கொங்கை யமுதருந்து மண்ணலுன்னை தொழு

5 பாதிதேகஞ் சத்திக்கீந்த பரமனுர்தரு பாலனே
ஆதிநீயாண்டார் புரத்திலமர்ந்து நின்ற வண்ணலே

ஓதிநின்ற பிரம்மனைச் சிறையில்வைத்த வுத்தமா
பூதியாகும்:பொய்யுடலி னுவறீர்த்த புண்ணியனே.

6 மந்திபோற் குதித்தெழுந்து மாறுகின்ற நெஞ்சமே
புந்திநைந்து ளாவிசெல்லும் போதுசெய்வ தென்ன
நந்திவாகன னளித்த நாதனுண்டார் புரியினில் [காண்
வந்துசேர முந்துமோக்ஷம் வந்துகூடு முண்மையே

7 எப்பிறப்பி லாயினு மெங்கிருந்து வாழினும் [மே
மிப்போதுண்ணு முணவலாது கண்டதென்ன நெஞ்ச
முப்புரத்தை நின்றெரித்த மூர்த்திதந்த வேலன்றுள்
எப்பொழுதுஞ் சிந்தைசெய்ய யிணையிலாத மோக்ஷ
[மே

8 ஈளையிருமற் சளியலா தெடுத்தகூட்டி லுள்ளதென்
மூளைகெட்டு நரைதிரையு மொய்த்துவீழு நெஞ்சமே
காளையேறு மையன் பெற்ற கார்த்திகேய னென்றுமே
தாளைபோற்ற முத்திமன்னி வாழ்வை சத்தியமென்றுமே

9 நாளு நெய்பால் நீயருந்தி நாடியே வலுக்கினும்
வேளிருந்து லாவுஞ்சோலை விந்தையை யரிகிலாய்
நாளிலா துயிரைந மனுங்கொண்டுபோக நாறிடும்
ஆளுமென் றுண்டார்புரி வாழறுமுகனைப் போற்றுமே

10 சுழித்திவிட்டு மாறல்போன்ற சுகமிலாத பிறவியில்
அழுந்திகெட் டலைந்துநீ யருவினைக் குளாகுவாய்
எழுந்தெழுந் துலாவுநெஞ்சே யேமன்வருகு முன்னமே
கொழுந்தவிட் டெழுந்தசோதிகுமரன் றுளைக்கோருவாய்

வேறு.

1 திலதை ‘லமெனத் திகழ்தரு வேலா
அலமுறு மடியனை யாண்டருள் சீலா
குலக்குற மகடனை கோரிய லோலா
நலனுற மயின்மிசை நடமிடு பாலா

2 உருவென வருவென வொளிரக வெளியே
குருபர னெனவுனை கோரியே தொழுவார்
கருவரை புகவிடா காத்தொளிற் பரவிண்
தருவென வவரவர் தேடிய தருள்வோய்

3 கடிமல ரடியிணை கருதினேன் கதிபெற
அடிநடு முடிவிலா னகமெனுங் குகைதொருங்
குடியென விலகிடு குமரனே குருபர
பொடிபட சூர்குலம் புகழுபெரு வேலா

4 வஞ்சனை குடிகொளு வன்மன முடையேன்
கஞ்சமலர்ப்பதங் கெஞ்சினேன் கதி பெற
அஞ்சன மிலகிக ளஞ்சலென் றிருபுரங்
கொஞ்சிய குமரனே குஞ்சரத் திளைவனே

5 சுகங்கோ ருயிர்தொருஞ் சுகமா யிலகுஞ்
சகரக்ஷ சகனே சரநா யகனே
ககவா கனனுர் மருகா கந்தா
அகமே வியவென் நிறையா ருயிரே

6 தீதா நரகில் தினமே யுழலும்
வாதா கியவன் மனமே தினியே

பாதாம் புயமே பணிவாய் தினமே
மேதாவிகளேறிய மேலருள் வான் 7

மானர் கலவி மகிழ்ந்தே யலைவேன்
நானு ரெனவே நாடி யுணரேன்
வானய் திகழும் வடிவே லிறைவா
ஞானு கரனே நாயேர்க் கருளாய் 8

நிலமேல் விழுந்தே நெடுமா மலைபோல்
அலறி மனைவி யையோ வெனுமுன்
கலைஞான மெனக் கருளுங் கந்தா
நிலையாம் பரனே நெடுவே லவனே 9

உடல்பொய் யுறவே யுலகத் தெவையும்
மடமைத் தகுமோ மனமே வினியே
கடமை யடியாற் கருளுங் கந்தன்
கட்லொத் திலகுங் கதியை தருவான் 10

ஆதா ரமிலா வுடற்கே யலைவேன்
பாதா ளமும்விண் பரந்தோன் குமரா
நீதா நினையாள நினைந் திலையே
லேதா குவனே யேழை யடியேன்

வே று.

ஆசாபி சாசுபிடித் தவதிபடு நாயேனை
வாசாம கோசரமாய் வானெனவே வந்தித்த
பேசாத வானந்த பேர்வாழ்வை நீயருளு
மர்சார வபிஷேக வாண்டார் புரிக்குமரா 1

பிள்ளையென்றும் பெண்டிரென்றும் பின்னவரி னுதவி
[யென்றுந்
துள்ளுமறி யாமனமே வுடறுறக்கும் போதுதவார்
அள்ளியன்ன மிட்டோர்வா ழாண்டார்புரிக்கதிபன்
வள்ளிக்கொடி படரும் வடிவேலன் தாள்துணையே 2

அண்டரெல்லா மபயமெனவருள்கொடுத்த வறுமுகனே
தொண்டரெல்லா மபயமெனத் துயரொழித்தசுகவடிவே
அண்டமெல்லா மோடிவரு மழகுமயி லேறியென்றன்
டண்டபலந் தீர்த்தருளும் பாலசுப்பி ரமணியனே 3

ஆங்காரங் கொண்டோ னறிவழிந்துன் னடிசிரத்தே
தாங்காது பாழ்நரகிற் றவித்துழன்று நிற்பேற்குப்
பாங்கான மயிலேறு மாண்டார் பதிக்குமரா
நீங்காத வானந்த நிட்டைதனை நீயருள்வாய் 4

என்பிழையையுனக்குரைத்தே னிங்குக்திபெறவடைந்தே
மின்துயரை தீர்த்தருளும்வன்னமயின் மேன்முருகா [ன்
நன்னெறியாஞ் சைவநிலை நானிலைக்க நீயருளாய்
தன்னுரைக்குந் தந்தைசிறந் தாழவுரை தற்பரனே 5

சிகண்டி முதுகேறி ஜெகமெங்கு மாண்டருளு
மகண்டசச்சி தானந்த வாறுமுகப் பெருமானே
வெகுண்டுவினை யான் மெலிந்தே வீடுபெறவந்தடைந்
அசமயக்கந் தீர்த்தருளு மாண்டார் புரிக்குமரா [தேன்

சென்றதுவேகாலமெல்லாஞ்சிதைந்ததுவேயிளைமநலம்
நின்றதுவே சாவுடற்கு நீனினைப்ப தென்மனமே
குன்றுதொரு மாடர்புரி சோலக்க லாபமிசை
மின்றிசழும் வடிவேலன் மலர்பதமு மிறைஞ்சுகவே 7

நீர்க்குமிழி யாமுடலி னேர்மைதனை யானறிந்தே
சீர்குலைந்தே யாவிசெலு முன்புனடி சேருவனோ
மூர்க்கமன முறவடுத்து மோகத்தா லுடனலிந்தே
நீர்குழிக்கே யாசைவைத்து நிலைமாறிப் போவேனோ

கொலைகளவு காமமுதல் கொடுந்தொழிலைப் புரிந்துமிகப்
புலையாண வச்செறுக்கில் புழுங்கிமனம் போவேனை
மலைவேடர் மகட்கணவா மன்றாடு பரன்குமரா
நிலையான முக்தியெனு நிலமேற்றி வாழ்வருளே 9

தரிபடுபஞ் செனவலைந்துத் தவித்துழலும் பாவியெனை
கரிமுகவ னார்க்கிளைய கதிர்வடிவே லாயுதனே
பரிவுடனே தொழுதேற்றும் பக்தரினஞ் சேர்த்து
பிறிவறவே நன்னிலையாம் பேர்வாழ்வை நீயருளே 10

வேறு.

ஆண்டார் புரியனை
வேண்டி நெஞ்சமே
நீண்ட வினையினை
ஈண்டொழிப்பையே 1

நாடி முருகனை
கூடு நெஞ்சமே
நீடு முத்தியென்
வீடு பெறுவையே 2

நெஞ்சமே யினி
வஞ்சம் விட்டுமே
செஞ்சொல் வேலவன்
கஞ்ச மலர் துதி 3

மின்னு வேலனை
என்னுந்துதிசெய
கன்னமரவியு
மென்னுந்தூரமே 4

முத்தி தருபவன்
சத்தி வேலவன்
நித்த முமவன்
பத்தி செய்யுமே 5

ஆல முண்டவன்
பால னானவன்
மூலக்கலை பெற
வேலனைத் துதி 6

சென்ற வாழ்தினங்
குன்று மேயுடல்
நின்று வேலனை
இன்றே போற்றுமே 7

ஆன முருகனே
ஞான போதனே
மான தந்தனின்
நீ னினைப்பையே 8

நல்ல நெஞ்சமே
தொல் லாண்டார்புரி
எல்லை சேரவே
அல்ல லில்லையே 9

உலகெலாம்புரந்
திலகு சோதியை
சலன மின்றியே
நிலமீ துணர்வையே 10

வேறு.

இருசந்திர னொருசூரிய னுதயந்தரு மயின்மேல்
பிரியந்தரு புகழ்பேசிய:வடியார்க் கருளீசா
அரிபண்பாடு மாலையணி யாண்டார்புரி வாசா
கரியானனற் கிளையாவெனைக் காப்பாய் தொழுதேனே

அமரர்பதி நிலையாற்றிடு மசுரர்குல காலா
சமணர்களைக் கழுவேற்றிய சம்பந்தனு மானோய்
உமதன்பனு மோதற்கரு ளாண்டார் புரிமுதலே
குமரக்குரு பரவென்றுனைக் கோரித் தொழுவேனே 2

கயமொன்றிய வாண்டார்புரிக் கந்தாகதிர்வேலா
அயன்மால்புக ழையாமலர்க் கையாவடி யேனை

மயனீங்கிட வருடந்திடு மயிலேறிய குகனே
நயந்தங்கிய வடியார்புகழ் நாதாவருட் போதா 3

அனவரதந் துயர்தன்னிலே யழுந்து மடியேனே
தினமுன்றனே தொழுவாரினஞ் சேரவருட் புரிவாய்
முனமுப்புரந் தழலாயெழ மூரல்கொண்டோன் பிள்ளாய்
அனமும்பயிலாண்டார்புரியரசேதொழுவேனே 4

வெறுத்துமனேகிளேகுலமும்விருத்தனென்னுமுன்னே
சிரித்துபுர மெரித்தசிவன் செவிவணங்க வோதும்
பெறுத்தமொழிஅடியேற்கருள்பிளைழயாவயும்பொறுத்தே
கறுத்தகுழல் குறத்திகணவாளாவுனைத்தொழுவேன். 5

அத்தம்மனே மக்கள்கிளே குலமுமாவற் கொள்ளுஞ்
சித்தந்தனே நின்றுண்மலர் சேரப்பெருவேனோ
தத்திந்திமி திகுதோமென நடனந்தட மயிலோய்
அத்தன்பிரண வார்த்தம்பெற வருள்வாயுனைத் தொழு
[வேன் 6

கந்தாகதிர் வேலாகார்த்தி கேயாவடி யேனின்
சிந்தாகுலந் தீர்க்கவந்த தெய்வசிகா மணியே
முந்தாநாவற கனிக்களைவையையடிமை கொண்டமுருகா
பைந்தாரணிபாலசுப்ரமண்யா பணிந்தேனே. 7

தவராயர்கள் கவிராயர்கள் சகராயகர்கள் முதலாய்
எவருந்தொழு தேற்றவரு ளாண்டார் புரிக்குமார
பவசாகரங் கடக்கப்பத வங்கந்துணே தந்தோய்
யெவனமக லாமுன்னமேயெனையாளுனைத்தொழுவேன் 8

கடிமாமலர் சூடுங்கதிர் வேலா கலைமூலா
அடியார்க் கிருப்பிடமுன்னடி யாண்டார் புரிக்குமரா
படிறன்பெரும் பதகன் வர பாதந் தலந் தருமோ
சுடிகையணிபாலசுப்பிரமண்ணியாஉனைத்தொழுவேன் 9

வெகுளியெனும்புலிபாய்ந்தெனைவிழுங்கவிடலென்னே
பகுநாவுடைப் பாம்பினுயிர் பருகுமயின் முருகா
வெகுகாலமிங்குடலெடுத்தேவினையான்மிகவலைந்தேன்
தகுவேலுடையாண்டார்புரிச்சதுராவுனைத்தொழுவேன் 10

வேறு.

நதிபாயு வயலலகு நந்தவன
னடவாவி யாண்டார்புரீ
சதிரான சண்முகவன் சீர்பாடி
சிரந்தாழ வரமருளுமே
அதிரூப வனமுலவு மமராவதிக்
கதிப னெழில் வேலனே
விதிதீர வுனைநாடி வருகின்றேன்வினை
போக்குங் குமரேசனே. 1

எனதாடை யென்பெண்டி ரென்மக்க
ளென்னத்த மென்றேசொலும்
மனமேட பலிகோரி விடுபாச
மெமதூதர் வருமுன்னமே
தனதான தனவென்ன வளிபாட
மயிலாடு மாண்டார் புர
உனதாக வுளயாவு முணர்வென்ன
வருள்கின்ற குமரேசனே. 2

வட்வேரி துயில்கின்ற பரந்தாமன்
மகட்கன்ப னறுமுகவனே
விடனாக முயிர்பருகு மயிலேறி
விளையாடு மாண்டார்புரா
விடமேவு கடலுலகி னிடராற்றில்
விழுகின்ற வடியேனையாள்
கடனாகு மருளீவை கருணாகரக்
கடவுள் குமரேசனே. 3

இருணாரு நெஞ்சுடைய னிழிவான
தொழிலுடைய னெளியேனுமே
சுருணாக பந்தென்ன வில்வாழ்வி
னிடைசிக்கி யிவைனீங்கவே
அரைநாரு மின்றிவெகு வழகாக
வருளீயு மாண்டார்புரா
சரணார விந்தமதைத் தமியேன்றன்
சிரஞ்சூட்டுங் குமரேசனே. 4

ஆரர்தந்த வயில்கந்த வணிசந்தம்
புனைகின்ற வெழின்மார்பனே
சூரர்பந்த சிரைசிந்த சூரனெம
புரமுந்த சமர்செய்தவா
வரந்தந்து திறம்வந்த சிகைதோகை
மயில்வந்த குருநாதனே
குரைகந்த மலர்போன்ற கழறந்தாள்
கதியென்றேன் குமரேசனே. 5

மலிவாச மலர்மாலை யணிகின்ற
முருகேசன் மலர்பாதமுஞ்

சலியாம தினமோத ஜகமாயை
சிறைநீங்கு மிதுதிண்ணமே
நலியாத பரவாழ்வி னானின்று
நிறைவாக கதிதந்திடாய்
ஒலியேறு மூரசதிரு முயராண்டி
புரமேவு குமரேசனே. 6

ஆசைபல கூடிவர யானுமதின்
பீடமென வேயுழலு வேன்
காசகப கோழை யென காரியுமிழ்
நாருசளி காயமுடையேன்
பாசம்விட பாவியம னுவிகொளும்
போதுசர வண வென்னவே
வாசமலர் பாதமனு தினமுந்துதி
வாயுமருள் குமரேசனே 7

சித்தமது நித்தமுமுன் சீரடிநினைத்து
செயலற்று னடியைப்
பக்திசெய நித்தநிலை முத்திதரு
சுத்தபரி பூரணமருள்
தித்திதிமி தித்திதிகு தகுதியென
நடனபரி மயிலி லிவரும்
வெற்றிதரு சத்திகர விமலவித்தக
வெனையாள் குமரேசனே 8

ஏதுறமெனக் கொண்டு வானட் கழிப்பை
சொல்லென் னெஞ்சமே
மாதுமக் களுமுனக் கானபந்துக்களும்
மாலிக் கெதிர்

வாதுசெய் துனைமீட்டு வையத்து
வைத்திடார் முருகன் கழல்
ஓதுநற் கதிபெருவை வுலகிலொப்
பருமூர்த்தி குமரேசனே. 9

அம்பிகை யழைக்கமுக மலர்ந்தோடி
வருகின்ற வாறு முகவா
உம்பருல கம்வாழ வுலகில்யா
வரும்வாழ வோங்கு முருகா
நம்புமடி யனுனுன்கு சாதனம்
பெறவருள் நடன மயிலோய்
கும்பமுனி யகத்துகையி லெழுகின்ற
விருள்தீர்க்குங் குமரேசனே. 10

வேறு.

ஆடி விழுந்திடு பம்பரம் போலுட
லாவி பரந்திடு முன்னே
நாடி யுனைத்துதி நாவு மெனக்கருள்
ஞானமு நல்கிய நாதா
ஓடி மயின்மிசை யுலகு வலம்வரு
வுத்தம வாண்டார் புரியில்
தேடி வருமடி யாருங் கதிபெற
திருவுரு கொண்டெழு குமரா 1

வானு மனற்புனற் வளியு நிலமென
வார்சடை கங்கையும் வைத்த
தானுந் தனித்து நின்றுடிய தற்பர
தேவர்து யர்க்கவ னிறங்கி

JT9854

பானு காந்தரு பொரியும் புனல்விட
பால னறுவுருக் கொண்டே
கானுறு வள்ளியும் வானுறு யானையுங்
கதிதர வெழுந்தருட் குமரா 2

மூவருந் தேவரு முனிவருந் தொழுதெழு
முதல்வன் றன்னடி காண
நாவலர் பாவலர் நாடி துதித்திடு
நண்ப னண்டார் புரியில்
சேவலங் கொடியொடு நடஞ்செய் மயின்மிசை
செங்கதிர் வேலொளி வீச
ஆவலுரு மடியாருக் கருடர வகங்கனிந்
தேவரு மம்பிகை குமரா 3

பந்தமு மறுத்திட பாய்மன விருளற
பருதிபோ லிலகுனின் பதமே
சிந்தனை செய்திடு மடியவ ரடிதொழச்
சித்தமெ னக்கருள் புரிவாய்
அந்தர துந்துமி யதிர முழங்கிடு
வாண்டார் புரியுயர் வேலா
வந்தனை புரிபவர் வாழ்க வென்றனுதினம்
வந்தெழுந் தருடரு குமரா 4

வார்சடை யம்பெரு மானும் வினவிட
சதுமறை முடியுரை விமலா
போர்புரி சூர்குலம் முழுவதும் பொடிபட
பொன்னிற மயின்மிசை தோன்றும்
கார்தவழ் சோலையுங் கானிகர் பூவன
வாண்டார் புரிக்கதிர் வேலா

சீர்தனைப் பேசிடு மடியவ ரருள்பெற
திருவுருக் கொண்டெழு குமார 5

கரையரு துயர்க்கடல் கவிழ்ந்தலை மொத்துணுங்
கடையனு மருள்பெற வருளாய்
கரைமிடற் றண்ணலுங் கஞ்சனு மரியுங்
கணபதி யம்பிகை யமரர்
வரையுரு முனிமுதல் யாவரும் வாழ்த்திட
வாண்டார் புரிதனக் கெழிலாய்
தரைதனி லடியவர் கண்டு தரிசிக்க
திருவுருக் கொண்டெழு குமாரா 6

ஊனிரை யுடலாய் யுடனிரை யுயிராய்
யுயிர்தனக் குணர்வா யிலகுங்
கானுறு விலங்குங் கடலுறு மீனுங்
கார்தவழ் மரமூர் வனவும்
வானுறு பறவையும் விண்ணவர் முதலாய்
விளங்க நடித்தவன் மகனே
தேனுள பூமணஞ் சூழுமாண் டார்புரி
திருவுருக் கொண்டெழு குமாரா 7

பகலிர வருமுப் பாழுங் கடந்தொளிர்
பதம்பெரு வெளிநடு காட்டி
இகலுறு யானென தெனுஞ் செருக்காழ்த்தி
யிணையரு சுகமெனக் கருளுங்
ககனர் களரசே கௌரிகண் மணியே
காரண வாண்டார் புரியில்
தகதகவெனு மயில் மீதுனை தரிசிக்க
திருவுருக் கொண்டெழு குமாரா. 8

பிரிவரு பூரண சுகமதில் நினைவறு
பேரருள் வாரியி லாழ்ந்து
கரியுரு வாகியே வானந் தாம்ருதங்
கடையனும் பெறவருட் புரிவாய்
அரிமுக சூரனும் பொடிபட வயில்விடு
ஐங்கரர்க் கிளையவ னாண்டார்
புரிதனி லடியவர் கண்டுனைப் போற்ற
பாலனுய் திகழ்தரு குமரா 9

நீரணி சடையா னம்பிகை யைங்கரன்
நித்தம் வாழ்த்திட வருவாய்
ஏரணி மடமா திருவரும் போற்ற
வினையடி முனிமலர் தூவ
நாரண குருவால் யானுனைப் போற்ற
நாடினே னாண்டார் புரியில்
சீரணி யடியவர் தினமுனைப்போற்ற
திருவுருக் கொண்டெழு குமரா 10

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் 100

ஓம் ஸாந்தி ஸாந்தி.

கண்மணி யெனவிளங்கும் கார்த்திகை மைந்தாபோற்றி
பண்ணிசை பாடல்கொண்ட பரமனே நின்றுள்போற்றி[,றி
அண்ணிதாயன்பர்போற்று மாண்டார்குப்பத்தரசேபோற்
விண்ணவர் மகளும்வள்ளி விரும்புவோய்போற்றிபோற்றி.

தனி.

உன்னும மோதி யுனையே வணங்கு
மடியார்க ளடியை தொழவே
முன்னு ளியற்று வினையே யொழிக்க
முருகா வரிக்கு மருகா
என்னு லியற்று புனைமாலை கொண்ட
வெழி லாண்டார்புரியின் கோவே
பொன்னு டளித்த புனிதா வெனக்கு
புகலுன்னை யன்றி யிலையே

படிமீது நாயேன் படுகின்ற துயரைப்
பார்த்து மருளா தென்னே
அடியார் பரவு மாண்டார் புரீச
னடியேன் மனதி னிருளை
பொடியாக்க நீயும் புலர்கின்ற ரவியே
போற்றித் தொழுதே னருளாய்
கடிமா மலர்சூழ் கந்தா வெனக்கு
கதியுன்னை யன்றி யிலையே

ஐயும் மிகுந்து வறியும் மழிந்து
ளாவித் துறக்கு முன்னே
மையுங் குழைத்த விழிகொண்ட மங்கை
யழுதுப் புலம்பு முன்னே
வையம் புணர்வு தீக்கால் வெளியு
மாயப் பரமன் மைந்தா
கையுந் தொழுது நாவும் வழுத்தி
கதிர்வேல வென்ன வருளே

மொழியாத மந்திர முணராத சிந்தை
மூவாத தீப மெனவே
சுழியாது வோடு நதிபோலு மன்பு
சுகமான ஞானம் பெறவும்
அழியார் புரத்தை யழன்மூட வன்று
குருமூரல் கொண்டோன் குமரா
அழியாத முத்தியருள் வாரி தன்னி
லடியேனும் வாழ வருளே

முருகா குமரா சரணஞ் சரணம்
மூவா முதலே வேனையாள் சரணம்
திருமால் மருகா சரணஞ் சரணஞ்
சேவற் கொடியோய் நின்றுள் சரணம்
அருவாய் திகழ்வோய் சரணஞ் சரணம்
அறுமீன் முலையுண் டவனே சரணம்
அருமா முகனே சரணஞ் சரணம்
ஆண்டார் புரிவா ழிறைவா சரணம்

ஞான கரனே சரணஞ் சரணம்
நாடித் தொழுவார் நண்பா சரணம்
வானய்த் திகழ்வோய் சரணஞ் சரணம்
வள்ளிக் கணவா வடியேன் சரணம்
தான யொளிர்வோய் சரணஞ் சரணம்
தணிகைத் தலபல முதல்வா சரணம்
ஆன வமுதே சரணஞ் சரணம்
ஆண்டார் புரிவா ழரசே சரணம்.

ஸ்ரீ குகேஸாய நம:

———

O26:56-2434
1429
179854

இந்த புத்தகம் கிடைக்குமிடம்
சாரதா புத்தகசாலை,
நெ. 23, பாளையப்பன் தெரு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.